# சஹாபீடியா - யுனெஸ்கோ திட்டம்
# ஃபெல்லோஷிப் 2019
# பின்னிணைப்பு IV

## சமர்ப்பித்தலுக்கான விளக்கங்கள்

### ஆராய்ச்சி என்றால் என்ன?

புதிய அல்லது ஏற்கெனவே இருக்கும் விஷயங்கள் மற்றும் மூலாதாரங்களைக் கொண்டு மேலும் அது தொடர்பான புதிய தகவல்களைத் திரட்டுவதும் அல்லது ஒரு மாறுபட்ட முடிவையும், புரிதலையும் எட்டுவதற்காக, ஒரு முறையான மற்றும் விரிவான ஆய்வை மேற்கொள்வது. ஆராய்ச்சி என்பது ஆரம்ப மற்றும் இரண்டாம் கட்ட ஆதாரங்களைக் கொண்டது. இந்த வகையைத் தெரிவு செய்யும் விண்ணப்பதாரர், கொடுக்கப்பட்ட சமர்ப்பித்தல்களில் இருந்து உரை வடிவிலான தெரிவுகளைத் தேர்ந்தெடுக்க வேண்டியது கட்டாயமாகும்.

### ஆவணப்படுத்தல் என்றால் என்ன?

புதிய அல்லது ஏற்கெனவே இருக்கும் மூல ஆதாரங்கள் குறித்த விரிவான காட்சிப் பதிவை, ஆவணப்படம் அல்லது புகைப்படங்கள் மூலமாக வெளிப்படுத்துவது. இந்த வகையைத் தெரிவு செய்யும் விண்ணப்பதாரர்கள், காட்சி அடிப்படையிலான சமர்ப்பித்தல்களைத் தெரிவு செய்ய வேண்டும்.

### சேர்க்கை

இந்த வகையைத் தேர்வு செய்யும் விண்ணப்பதாரர், அவளது/அவனது விளக்க உரைக்கு இணக்கமான ஆதரவைப் பெற, கொடுக்கப்பட்ட சமர்ப்பித்தல்களில் இருந்து உரை மற்றும் காட்சி அடிப்படையிலான தெரிவுகளைத் தேர்ந்தெடுக்கலாம்.

### எழுதும் வழிமுறைகள்

கட்டுரைகள் பொதுமக்களுக்காகத் தானேயன்றி வல்லுநர்களுக்காக அல்ல. ஒரு சாதாரண வாசகனும் புரிந்து கொள்ளும் வண்ணம் அவை தெளிவாகவும் அவனை சென்றடையுமாறும் இருக்க வேண்டும். வாசகங்களின் பயன்பட்டைத் தவிர்க்க வேண்டும். தெளிவற்ற குறிப்புக்கள் ஏதுமிருந்தால் அவை விளக்கப்பட வேண்டும்.

எழுத்து கூர்மையாகவும், விவாதங்களோ அல்லது சொல்லப்படும் விஷயங்களோ தெளிவுடனும் தீர்க்கமுடனும் இருக்க வேண்டும். நீண்ட அடுக்கு வாக்கியங்களைத் தவிர்த்து, கூடிய வரையில் எளிய சொற்களைத் தேர்வு செய்யவும்.

எல்லா கட்டுரைகளும், வீடியோக்களும் உரிய குறிப்புகளுடன் இருக்க வேண்டும். ஒவ்வொரு சமர்ப்பித்தலுடனும், விரிவான குறிப்புப் பட்டியல்கள்/நூற்பட்டியல்கள்/ஆதாரங்கள் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

அனைத்து வட்டார மொழி சமர்ப்பிப்புகளும் யுனிகோட் எழுத்துருக்களில் இருக்க வேண்டும்.

சஹாபீடியா.orgல் உள்ள சில உதாரணங்கள்:

- (Basgo: Remains of a Royal Precinct)
- Door Frame Designs of Nagara Temples

**சமர்ப்பித்தல் I : ஏதேனும் ஒன்றைத் தெரிவு செய்யவும்**

1. **விளக்கக் முன்னோட்டம்:** ஒரு முன்னோட்டம் என்பது எடுத்துக் கொண்ட விஷயத்தை 3000 சொற்களுக்குள் அறிமுகப்படுத்தும் முக்கியக் கட்டுரையாகும். ஒரு வகையில், இது எடுத்துக் கொண்டிருக்கும் விஷயத்தின் முக்கிய அம்சங்கள், முக்கியப் பிரச்னைகளை ஆராய்வது, தற்போதிருக்கும் அது தொடர்பான ஆவணங்களை வகைப்படுத்துவது மற்றும் இதில்

மேலும் ஆய்வு செய்வதற்கான வழிவகைகளை அளிப்பது உள்ளிட்டவை அடங்கும். இந்த ஆய்வில் எந்தவொரு காட்சிப் பிரதிநிதித்துவமும் இல்லாத பட்சத்தில், தலைப்புக்களுடன் 5-10 விளக்கங்கள்/படங்கள் கொண்டதாக முன்னோட்டம் இருக்க வேண்டும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர் மட்டுமே கட்டுரையை எழுத வேண்டும், ஆயினும், தேவைப்பட்டால் முன்னோட்டம் எழுதுவதற்கு துறை நிபுணரின் உதவியை நாடலாம்.

சஹாபீடியா.orgன் சில உதாரணங்கள்:

- **Manuscript Painting of Assam : Historical and Contemporary Perspectives.(ஃபெல்லோஷிப் 2017)**
- **Reimagining Rajasthan : An institutitional history of Rupayan Sansthan, Jodhpur**
- **The vegetation of the Thar Desert : Geography, History, Culture and Conservstion (ஃபெல்லோஷிப் 2017).**

2. **குறு ஆவணப்படம் (15-20 நிமிடங்கள் கொண்டது)**: குறு ஆவணப்படம் என்பது, விளக்க முன்னோட்டக் கட்டுரையில் கூறப்படுவது போலவே, விஷயத்தை அறிமுகப்படுத்துவதாக இருக்க வேண்டும். சிறந்த கருத்துக்களுடன், தெளிவான கதையோட்டமும், கூர்மையான மையக் கருத்தும் கொண்டிருக்க வேண்டும். எல்லா வீடியோக்களும் ஆங்கில மொழிபெயர்ப்புடன் இருக்க வேண்டும்.
கூடுதலாக, 500 சொற்களுக்குள் கதைச்சுருக்கமும் தேவை. ஆய்வு மாணவர் ஆவணத்தை உருவாக்கி அதன் தயாரிப்பை மேற்பார்வையிட வேண்டும். வீடியோ எடுப்பதற்கு நிபுணரின் உதவியை நாடலாம்.

சஹாபீடியா.org சில உதாரணங்கள் :-

- **Majnu ka Tilla (ஃபெல்லோஷிப் 2017)**
- **Saharay : An Unexpected Heritage of the Santhal Community (ஃபெல்லோஷிப் 2017)**

- **Hyderabadi Tryst with Iftar (ஃபெல்லோஷிப் 2017)**

(தெரிவு செய்யப்பட்ட ஆய்வுத் திட்டங்களுக்கு, இயக்கம் மற்றும் படத் தொகுப்புக்கான உதவிகளை சஹாபீடியாவில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.)

**சமர்ப்பித்தல் II மற்றும் III. ஏதேனும் இரண்டைத் தெரிவு செய்யவும்**

1. **உடன் சார்ந்த விளக்கக் கட்டுரை:** உடன் சார்ந்த கட்டுரை என்பது முன்னோட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விரிவான விஷயத்திற்குள், குறிப்பிட்ட மையக்கருத்துக்களில் கவனம் செலுத்தும் வகையில் 1500 சொற்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர், முன்னோட்டத்துடன் கூடவே, இதற்கான கட்டுரையையும் எழுதலாம். அல்லது மற்றொரு வல்லுநரையோ, நிபுணரையோ அணுகலாம்.

   சஹாபீடியா.org ன் சில உதாரணங்கள் :
   - **A medley of Faiths : Towards a Composite Religious Culture in Early Medieval Rarh (ஃபெல்லோஷிப் 2017)**
   - **Kapdagondas : Embroidery and Work for Dongariyakondh Women (ஃபெல்லோஷிப் 2017)**

2. **புகைப்படக் கட்டுரை (20 படங்கள்):** புகைப்படக் கட்டுரை என்பது எடுத்துக் கொண்ட விஷயத்தை காட்சிப் படங்கள் மூலம் விளக்குவதாகும். புகைப்படங்கள், 500 முதல் 800 வார்த்தைகள் கொண்ட சுய விளக்க உரையுடன் அமைந்திருக்க வேண்டும். இந்த உரையை, அறிமுகம் மற்றும் விரிவான விவரணைகள், புகைப்படங்களுக்கு ஏற்ற நீடித்த தலைப்புக்கள் என பிரித்துக் கொள்ளலாம் அல்லது உரைகள் புகைப்படங்களுடன் பொருத்தப்பட்டதாகவும் இருக்கலாம். ஆய்வு மாணவர் புகைப்படம் எடுப்பதும், உரையை எழுதுவதும் என இரண்டையும் ஒருசேர மேற்கொள்ளலாம்; அல்லது, இரண்டு பணிகளையும்

அல்லது ஒரு பணியை, புகைப்பட/எழுத்தாள நிபுணரிடம் ஒப்படைக்கலாம்.
புகைப்படத்திற்கான வரையறைகள் :குறைந்தபட்சம் நீளவாக்கில் 1500 பிக்ஸல்கள் கொண்டதாகவும், இரண்டு எம்.பி,க்குக் குறையாமலும் இருக்க வேண்டும்.

சஹாபீடியா.org ன் சில உதாரணங்கள் :

- Badla Embroiderers of Lucknow
- Life in the Lolab valley
- Gomira - Mask Dance of North Bengal

**அல்லது**

1. **புகைப்படத் தொகுப்பு (30-50 படங்கள்) :** விஷயம் சார்ந்த காட்சி ஆவணங்கள் கொண்டதாக படத்தொகுப்பு இருக்க வேண்டும், புகைப்படக் கட்டுரை விளக்கம் எதுவும் தேவையில்லை. சுருக்கமாக 200-300 சொற்களுக்குள் அறிமுக விளக்கமும், ஒவ்வொரு படத்திற்கும் விரிவான தலைப்பையும் தொகுப்பு கொண்டிருக்க வேண்டும். ஆய்வு மாணவர் புகைப்படம் எடுப்பதும், உரையை எழுதுவதும் என இரண்டையும் ஒருசேர மேற்கொள்ளலாம்; அல்லது, இரண்டு பணிகளையும் அல்லது ஒரு பணியை, புகைப்பட/எழுத்தாள நிபுணரிடம் ஒப்படைக்கலாம்.

சஹாபீடியா.org ன் சில உதாரணங்கள் :

- Images of Champaner-Pavagarh II
- Flora and Fauna of Sundarbans
- Mud Murals of Singhbhum Pushkar : A Changing World

**3. உரை வடிவிலான பேட்டி:** குறிப்பிட்ட துறை சார்ந்த வல்லுநர்/நடைமுறை செயற்பாட்டாளர் ஆகியோரின் கருத்துக்கள் மற்றும் அனுபவங்களை எழுத்து வடிவில் பதிவு செய்து கொள்ளலாம். ஆராய்ச்சியின் அடிப்படையில், 10 கேள்விகளுக்கு மிகாமல் கேள்வி-

பதில் உருவாக்கலாம். இவை, குறிப்பிட்ட மையக்கருத்துக்களில் கவனம் செலுத்துபவையாகவும், கூர்மையான விவாதத்திற்கு உகந்ததாகவும் இருக்க வேண்டும். ஆய்வு மாணவரே பேட்டியைத் தயார்படுத்தி மேற்கொள்ள வேண்டும்.

சஹாபீடியா.org ன் சில உதாரணங்கள் :

- **Interview with Dr H.S.Shivaprakash on Vachanas, Akkamahadevi and translations (Indian Art Criticism : Its Past and Present)**
- **Interview with Prof. Ebba Koch about the Taj Mahal and Mughal Architecture (In Conversation : Ebba Koch).**